# போர்வாள்

திராவிடர் வார வெளியீடு...


| வாள் | திருவள்ளுவர் ஆண்டு 1979 ஆடி 16 | வீச்சு |
|---|---|---|
| 1 | 31-7-48 சனிக்கிழமை | 49 |



ஆசிரியர்கள்:


மணிமொழியார்



1 1/2 அணா

ஆண்டுத் தொகை ரூ. 5


## சென்னையில் நேரு! — 1




“வடநாடும் தென்னாடும் கலாசாரத்தில் வெவ்வேறுதான் என்றாலும் இரண்டும் ஒன்றாயிருக்க முடியும்”—சென்னையில் நேருவின் பேச்சு !




## மீண்ட இன்பம் (நாவல்)

[ஆசிரியர் : ராம. நாக. முத்தையா. விலை 1-8-0. தமிழக நிலையம், சண்முகநாத புரம், காரைக்குடி வழி.]

சல சல வெனப் பாய்ந்து வரும் அருவிநீர் போன்ற தமிழ் நடை, உயர்ந்த சிந்தனைகளை உள்ளத்தில் தூவிடும் சுவையான தோர் கதைப் போக்கு, பழமைப்பித்தர்களின் பத்தாம் பசலித் தன்மைக்கு இடை இடையே தரப்படும் கசையடி, செந்தமிழ் இளைஞரிடையே இந்நாள் விளைந்துள்ள மறுமலர்ச்சி தமிழுணர்ச்சி, இவற்றின் படப்பிடிப்புகள்—இவ்வளவையும் எங்கே காணலாம்? "மீண்ட இன்பத்"தில் காணலாம். காண வேண்டும் தமிழர்கள்—அதிலும் குறிப்பாக, இளைஞர்கள்!

## மலரும் தமிழகம்

[கவிதைகள்; ஆசிரியர்: சாமி. பழனியப்பன். விலை 1-0-0. செந்தமிழ்ப் பண்ணை, புதுப்பட்டி, பொன்னமராவதி]

இன்றைய தமிழகத்தில் பாரதிதாசன் பரம்பரை ஒன்று வெகு வேகமாக வளர்ந்து வருகிறது. அந்தப் பரம்பரையில் வரும் இளங் கவிஞர்களுக்குள்ளே தலையாடவர்களின் கூட்டம் ஒன்றுண்டு. அந்தக் கூட்டத்தின் முதல் வரிசையில் நிற்பவர் தோழர் பழனியப்பன். பழனியப்பனின் உள்ளம், இக்கவிதைச் சுவடி! தமிழ் வெறி, புரட்சிக் கனல், புதுமைப் பித்து, சுயமரியாதை வேகம் இவ்வளவும் இருக்கின்றன இச் சின்னஞ் சிறு சுவடியில். ஆச்சரியம்! ஆனால், உண்மை!

## திராவிடக் கழக இலட்சியம்

[பெரியார் பேருரைகள். விலை 0-4-0 குடிஅரசுப் பதிப்பகம், ஈரோடு]

குடிஅரசுப் பதிப்பகம் என்றால் பகுத்தறிவுப் பாசறை என்று பொருள். பெரியார் பேருரை என்றால் புரட்சிக்குரிய போர்வாள் என்று பொருள் பாசறை போர்வாளைத் தருகிறது தமிழகத்திற்கு, தமிழகம் அதனைக் கரத்திலேந்தட்டும், புதுவாழ்வு பெறட்டும்.

## ஆட்சிச்சொல் அகரவரிசை இல்லப்பெயர் அகரவரிசை:

[முன்னது விலை 0-7-0 பின்னது விலை 0-3-0 இடம் : சைவசித்தாந்தக் கழகம், பவழக்காரத் தெரு, சென்னை]

புதிய தமிழகம் தோன்ற வேண்டுமானால் அதற்கு நாம் செய்து தீரவேண்டிய அடிப்படை ஆக்க வேலைகளில் ஒன்று, இத்தகைய நூல் வெளியிடுதல் "ஆட்சிச் சொல் அகரவரிசை," அரசியல் துறையிலும் ஆட்சித் துறையிலும் நாம் பயன் படுத்தி வரும் ஏராளமான ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தூய தமிழ்ச் சொற்களைத் தருகிறது. "இல்லப் பெயர் அகரவரிசை," 'பவன், மண்டல்' முதலியன இனியேனும் தமிழகத்தில் இல்லாதொழிய வழிதேடுகிறது. தமிழர் ஆட்சி தோன்ற முன்னால் தமிழின் ஆட்சி தமிழகம் எங்கணும் தோன்றியாக வேண்டும். அதற்கு இவ்விரு சுவடிகளும் இவை அனைய பிற சுவடிகளும் தமிழர் இல்லந்தோறும் தவழ வேண்டுவது இன்றியமையாதது.

## புரட்சிமுரசு

[கவிதை நூல். ஆசிரியர் : பாலகுரு. விலை 0-12-0. அர்ச்சுனன் நிலையம், ஈரோடு.]

சுவை ததும்பும் சொற்கள், புரட்சிப் புனல் ததும்பும் கருத்து, தன்மான எழில் ததும்பும் உள்ளம் இம் மூன்றின் திரட்டு, "புரட்சி முரசு." கவிதைகள் இனியன எளிய நடையின; ஈரோட்டுப் பாதையின. பெரியார் அவர்களின் பாராட்டுடன் கூடியது இந் நூல்.

---

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

விற்குத் துரோகம் செய்தவனாகிறான். தாய் நாட்டை நேசியாதவன், தேசத்துரோகியாகிறான். தாய் மொழியைப் பாராட்டாதவன் தாய் மொழியைக் காட்டிக் கொடுத்த துரோகியாகிறான்.

ஏசுநாதரைக் கொஞ்சப் பணத்துக்காக காட்டிக்கொடுத்த ஜூடாஸ் என்று, தாய் மொழியைக் காட்டிக் கொடுப்பவனை நாம் கூறுவோமாக.

ஜூடாஸ் செய்த சதி காரணமாக ஏசுநாதர் கொல்லப்பட்டார் ஆனால் கிருஸ்து மார்க்கம் நிலைத்து நிற்கிறது. அது போன்றே திராவிட மொழிகளும் இன்றைய ஜூடாஸ்களுக்குத் தப்பி நிலைத்து நிற்குமாக.

---

தொடர்கதை :

# மனப்புயல்

## இராதாமணாளன்

[முன்பு: படகோட்டியின் குடிசையில் குமாரும் கோபாலும் பேசிக்கொண் டிருக்கின்றனர். பேச்சு தொடர்கிறது]

"கோபால், எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது."

"என்ன?"

"வேலாயியோ ஆதரவற்று இருக்கிறாள். அத்துடன் பூர்ண கர்ப்பிணியாகவும் காணப்படுகிறாள். இந்த நிலையில் அவளைத் தனியாக விட்டு விட்டு நாம் செல்வது சரியல்ல என்று எனக்குத் தோன்றுகிறது."

"ஆமாம் குமார், எனக்கும் அவளுக்கு ஏதாகிலும் உதவி புரிய வேண்டுமென்ற எண்ணம் தான் பிறக்கிறது. இந்நிலையில் நாம் என்ன செய்ய முடியும்?"

"ஏன் செய்ய முடியாது? நாம் படகோட்டிகளாகி விட்டால்?"

"நல்ல யோசனைதான். ஆனால் யாராகிலும் நம்மைப் பார்த்து விட்டால்?"

"மாறு வேடத்தோடு நாம் இருந்தால், நம்மை யாரும் அவ்வளவு சுலபத்தில் கண்டு பிடிக்க முடியாது. அத்துடன் நம் குரலையும் பேசும் முறையையும் மாற்றிக்கொள்ள வேண்டும்."

"சரி! அப்படியே செய்யலாம்."

"இந்த வழியில் நமக்கு இரண்டு விதத்தில் லாபம். அனாதைப் பெண்ணை ஆதரித்தோம் என்பதிலே நமக்கொரு மன ஆறுதல். ஊருக்கு அருகேயே இருப்பதால், செய்திகள் அடிக்கடி சுலபமாகக் கிடைக்கவும் வசதியாக இருக்கும்."

"போலீஸார் கண்ணில் பட்டு விட்டால்?"

"போலீஸார் விஷயம் உனக்குத் தெரியாதா? ஒரு ஊரைச் சேர்ந்த ஒருவன் தலை மறைவாக இருக்கிறான் என்றால், அவன் சொந்த ஊருக்கு ஐம்பது மைலுக்கு அப்பால் தேடுவது தான் போலீஸாரின் வழக்கம். ஏனென்றால் சொந்த ஊருக்கருகில் தைரியமாக அவன் இருக்க மாட்டான் என்பது அவர்களின் நினைப்பு!" குமார் இப்படிக் கூறியதும் "ஆமாம்! ஆமாம்!' என்று தலை ஆட்டிவிட்டு கோபால் சிரித்தான்.

கோபாலும் குமாரும் மாறு வேடம் பூண்டு, படகோட்டி, அதனால் கிடைத்த சிறிதளவு பணத்தில் மூவரும் நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தார்கள். அடிக்கடி ஆண்டி வந்து செய்திகளைக் கூறுவான். சில நாட்களில் வேணியும் அவர்களை வந்து பார்த்துவிட்டுச் செல்வாள். மாதங்கள் பல இப்படியே மறைந்தன.

பதினைருவது பகுதி

### ஆரியனின் கண்கள்

குடிசையின் வெளியில் குமாரும் கோபாலும் குந்தி இருந்தனர். இருவரின் முகங்களும் வாடி இருந்தன. குடிசையினுள்ளே படகோட்டி காத்தனின் மனைவி வேலாயி பிரசவ வேதனை பட்டுக் கொண்டிருந்தாள். இரவு நேரமாகையினால் அப்பக்கம் ஜன நடமாட்டமோ கிடையாது.

"கோபால், வேலாயி தனியாக இருக்கிறாள்! பாபம் ஒரு பெண் துணையும் அவள் அருகில் இல்லை. அடுத்த கிராமத்திற்குச் சென்று மருத்துவச்சியை அழைத்துக் கொண்டு வரமுடியாத நிலைமையில் நாம் இருக்கிறோம்.........."

"ஏன் அழைத்துக் கொண்டு வரமுடியாது?"

"அக் கிராமத்திற்குச் செல்லும்போது நம்மை யாராவது கண்டுபிடித்து விட்டால்?"

"இங்கு எவ்வளவோ பேர் வருகிறார்கள், போகிறார்கள். அவர்களில் ஒருவரால் கூட இன்னும் நம்மைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படி இருக்க அக் கிராமத்தில்மட்டும் கண்டு பிடித்துவிட இயலுமா?"

"எனக்கென்னவோ நாம் சென்று அழைத்துக் கொண்டு வருவது சரி என்று படவில்லை."

"வேலாயி படும் வேதனை உன் காதுகளில் கேட்கவில்லையா குமார்?"

"ஆம், கேட்கிறது!"

"அவளுக்கு உதவியளிக்க வேண்டியது நம் கடமை அல்லவா?"

"ஆமாம்! அதனால்! இன்னலில் நாம் சிக்கிக் கொண்டால்?"

"இப்பொழுது இரவு நேரம். போலீஸார் நம்மைத் தேடும் நேரம். இது எனக்குத் தெரியும் இதனால் ஆபத்து நேர்ந்தாலும் நேரும், அதனையும் நான் அறிவேன். இருந்தாலும் அபலை ஒருத்தியின் ஆபத்தில் உதவாத சுயநலம் மிக்க கயவர்கள் என்ற பழிச்சொல் நமக்கு வரக் கூடாது! வேலாயியைப் பத்திரமாக நீ பார்த்துக்கொள். ஒரு நொடியில் நான்சென்று மருத்து

ஆலு

வச்சியை அழைத்துக் கொண்டு வருகிறேன்!''

"நானும் உனக்குத் துணையாக வருகிறேனே?''

"இங்கு வேலாயிக்கு யார் துணை?

"சரி கோபால், விரைவாக வந்துவிடு''

கோபால் சென்றதும், குமார் தனியாக உட்கார்ந்துகொண்டு எதைஎதைப்பற்றியோ யோசிக்கலானான்.

"காத்தான் இன்று உயிரோடு இருந்திருந்தால், மருத்துவச்சி இந்நேரம் வந்துவிட்டிருக்கமாட்டாளா? குடிசையின் வெளியில் உட்கார்ந்துகொண்டு தனக்குப் பிறப்பது ஆண் சிங்கமா அல்லது பெண் அன்னமா என்பதை அறிய அவன் எவ்வளவு துடிதுடிப்போடு இருந்திருப்பான்? குழந்தையின் அழுகுரலைக் கேட்டால் அவன் உள்ளம் எவ்வளவு குளிர்ந்திருக்கும்?'' இவ்வாறு காத்தானைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்த அவன் மனம், மிகமிக வேகமாக குமுதத்தை நாடி மலர்புரிக்கு ஓடியது! காலடி சப்தம் கேட்கவே கண்களை நன்றாகத்திறந்து பார்த்தான். கோபால் திரும்பிவந்து கொண்டிருப்பதைக் கண்டதும், அவனை நோக்கி நடந்தான்.

"கோபால், மருத்துவச்சியை அழைத்துக் கொண்டு வரவில்லையா?''

"வழியில் ஆண்டி வந்தான், அவனை அழைத்துக் கொண்டு வரும்படிக் கூறிவிட்டு, நீ தனியாக இருப்பாயே என்று நான் வந்து விட்டேன்.''

இருவரும் நீண்ட நேரம் உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

யாரோ இருவர் வருவதைக் கண்ட அவர்கள், ஆண்டியும் மருத்துவச்சியும் தான் வருகின்றனர் என்று எண்ணினர். ஆனால் ஒரு கிழவனும், ஒரு சிறிய பெண்ணும் குடிசையின் அருகே வந்து, "படகோட்டி இல்லையா?'' என்று கேட்டனர்.

"ஏன் சாமி! இதோ இருக்கேனே?'' என்று படகோட்டி பேசுவதைப் போல் குமார் பேசினான். "அக்கரை போகவேண்டும் வருகிறாயா?'' என்று கிழவன் வினவினான்.

"ஏம்பா, பொழுது விடியப் போராப்பலே இருக்கு, நீபோ! நானு இங்கேயே இருக்கிறேன்.'' என்று கோபால் கூறியதும், படகு தள்ள குமார் சென்றான்.

கிழவனையும் பெண்ணையும் அக்கரையில் விட்டுவிட்டு படகை வேகமாகத்தள்ளிக்கொண்டு இக்கரைக்கு வந்தான். வேறு இருவர் அக்கரை செல்ல வேண்டுமென்று காத்துக் கொண்டிருந்தனர். அவர்களையும் அக்கரையில் கொணடு போய் சேர்த்தான். குமார் குடிசைக்குச் செல்ல முடியாதபடி பலர் வந்து கொண்டே இருந்தனர். படகைத் தள்ளித் தள்ளி அவனது கைகள் தளர்ந்துவிட்டதால் இக்கரைக்கு வந்து சேர்ந்து உட்கார்ந்தான். பொழுது புலர்ந்துவிட்டது. கதிரவனும் பவனிவரத் தொடங்கிவிட்டான். புல்தரையில் மேய்க்க மாடுகளைச் சிறுவர்கள் ஓட்டிக் கொண்டு வந்தனர்.

வேலாயி குளிகுளித்து விட்டாளா என்பதைப் பார்த்துக் கொண்டுவரலாமென்று எழுந்து நடக்கத் தொடங்கிய குமார், தன்னை யாரோ கை தட்டி அழைப்பதைக் கண்டு திரும்பினான். அழைத்தவரைக் கண்டதும் ஆச்சரியத்தால் அவன் கண்கள் விரிந்தன. பயத்தால் உள்ளம் படபடவென அடித்துக் கொண்டது. உடலில் சிறு நடுக்கம் ஏற்பட்டது. தன்னைச் சமாளித்துக் கொண்டு பரம்பரை படகோட்டியைப் போல நடிக்க ஆரம்பித்தான்.

அங்கு வந்தவர் சதாரண மனிதரா? அல்ல! அல்ல! அவர் மனிதரே அல்ல! பூதேவர்! ஜாதிக்கெல்லாம் மிக உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவரும், பிரம்மாவின் முகத்திலிருந்து உதித்தவரும், இந்து மத ரட்சகரும், மார்பில் பூணூலும், கையில் பஞ்சாங்கமும் கொண்டு மக்களை, ரம்பையும் மேனகையும் தம் சிற்றிடை அசைத்து சிருங்கார நடனம் செய்யும் மோட்ச லோகத்திற்கு அனுப்பும் அருந் தொண்டை மேற்கொண்டவருமான பிரம்மஸ்ரீ கோட்டீஸ்வரய்யர் தான் அங்கு நின்றிருந்தவர்!!

குமாரை அவர் கண்கள் ஏற இறங்கப் பார்த்தன! அவர் கண்களில் ஆநந்த ஒளி வீசியது. ஆனால் அந்த ஆரியனின் கண்களைப் பார்க்கவே குமாருக்குப் பயமாக இருந்தது. அய்யர் அறிந்து கொண்டார், படகோட்டி வேடத்தில் குமார் இருக்கிறான் என்பதை. ஆகவே மெதுவாக அவனிடம் பேச்சு கொடுத்தார். குமாரைத் தான் தெரிந்துகொள்ளாததைப் போலவே மிகமிகத் திறமையாக நடித்தார்.

"டே! உன்பெயர் என்ன?'' என்றார் அய்யர்.

"என்போரா சாமி, மாரி!''

"நீ எந்த ஊர்?''

"இங்கேதான் சாமி இருக்கேன்''

கோட்டீஸ்வர அய்யர் கண்களை உருட்டி ஒரு விதமாகப் பார்த்தார்.

"சோலையூரா நீ?''

"இல்லே சாமி!''

"எப்போதாகிலும் போய் இருக்கிறாயா?''

"இல்லீங்களே! என்னசாமி

அங்கு விசேஷம்?''

"ஒன்றுமில்லை. ஐந்து நாட்களுக்கு முன்பு அங்கொரு கல்யாணம் நடந்தது........."

"யாருக்குங்கோ?''

"சிவன் என்ற பணக்காரப் பயலுக்கும், பழத்தூர் வைத்தியர் வையாபுரியின் மகள் குமுதத்திற்கும் கல்யாணம் நடந்தது. அதற்காக........."

"உண்மையாகவா?'' என்று திடுக்கிட்டு பதறிக் கேட்டான் குமார்.

"ஆமாம் அப்பா, ஆமாம்! வேண்டுமானல் கல்யாணப் பத்திரிகை இதோ இருக்கிறது பாரேன்!'' என்று பையிலிருந்து ஒரு திருமண இதழை அவனிடம் நீட்டினன். குமார் அதனை வாங்கினன்.

"டே! உனக்குப் படிக்கக் கூடத் தெரியுமா?''

"கொஞ்சம் கொஞ்சம், அப்படியும் இப்படியும கூட்டிக்கூட்டிப் படிப்பேனுங்கோ'' என்று நடுநடுங்கும் குரலில் கூறினன்.

பிறகு அய்யரைப் படகில் அக்கரைக்குக் கொண்டுபோய் விட்டுவிட்டுத் திரும்பினன்.

"தொலைந்தீர்கள் இனிமேல்!'' என்று மகிழ்ச்சியோடு கூறிக்கொண்டு வேகமாக நடந்தார் கோட்டீஸ்வர அய்யர்.

போகிற அவசரத்தில் திருமணத்தாளைத் திருப்பி வாங்கிக்கொள்ளாமலே போய்விட்டார் அய்யர். அவர் போனதும், தாளைப் பிரித்தெடுத்துப் படித்தான், தன் ஆசைக் காதலி குமுதம் சிவனுக்கு மனைவியாகிவிட்டாள் என்பதை அழுத்தந்திருத்தமாக அறிவித்தது அந்தத் தாள். அறிவித்ததா, இல்லை, கூரிய ஈட்டி முனை கொண்டு தாக்கிற்று அவன் இதயத்தை. சுருண்டு வீழ்ந்தான் குமார். வீழ்ந்தபோது அவன் உதடுகள் ஏதோ முணுமுணுத்தன. அது இன்னதென்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனல் அந்த ஒலி அலைகள் எழுத்துருவம் பெற முடியுமானல் அது கிட்டத்தட்ட இதுபோலிருக்கும் :—**குமுதினி....ஒரு....துரோகி!**

(தொடரும்)

---

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

மென்' போன்ற பெயர்கள் அமர்ந்திருக்கின்றனர். ஒவ்வொரு பூகோளபடமும் லண்டன் நகரின் ஒரு பகுதியைக் குறிக்கிறது. ஒவ்வொரு டிராப்ட்ஸ்மெனும் ஒரு போலீஸ் மோட்டார்காரை பிரதிபலிக்கிறர். போலீஸ் உடைதரித்த டிரைவர்களால் ஓட்டப்படும் ரோந்து மோட்டார்கள் வட்டங்கள் மூலம் படத்தில் குறிக்கப்பட்டுள்ளன. தகவல் அறையிலுள்ள சதுர வடிவமான வளையங்கள் பிரைவேட் கார்களைப்போல் காணப்படுவதும் சிவில் உடைதரித்த போலீஸார் உள்ளதுமான மோட்டார்கார்களை பிரதிநிதிக்கின்றன. படகு உருவமுள்ள வளையங்கள் தேம்ஸ் நதிமீதுள்ள போலீஸ் நீராவிப் படகுகளைக் குறிக்கின்றன. லண்டன் நகரிலுள்ள 23 டிவிஷனல் காரியாலயங்களுடன் நேரடியான தொடர்பு கொள்ளுவதற்காக டெலிபிரிண்டர் ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளது.

லண்டன் நகரின் சகல பகுதிகளிலும் போலீஸ் டெலிபோன் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. தபால் பெட்டிகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக இப்பெட்டிகளின்மீது நீல வர்ணம் பூசப்பட்டுள்ளது. பெட்டியின் கதவைத் திறக்காமலேயே டெலிபோனின் ரிசீவரை எடுத்து உடனடியாக சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுடன் பொது மக்கள் பேசமுடியும். ரோந்து வேலையில் ஈடுபட்டுள்ள போலீஸாரே தங்களுடைய காரியாலயங்களுக்குத் தகவல் அனுப்ப இவைகளைத்தான் உபயோகிக்கின்றனர். ஒவ்வொரு பெட்டியின் மீதும் ஒரு மின்சார விளக்கு பொருத்தப்பட்டுள்ளது. அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷன், ரோந்து போலீஸாருடன் பேச விரும்பினல் அம்மின்சார விளக்கு மூலம் சமிக்ஞை செய்யப்படுகிறது. தகவல் இலாகாவினல் கையாளப்படும் பலவிதமான முறைகளும், ரேடியோ பொருத்தப்பட்ட கார்களும்தான், கடந்த ஆண்டு, 7000 குற்றவாளிகளைக் கைது செய்ய உதவியுள்ளன.

ஸ்காட்லாந்து யார்டின் விரல் ரேகை இலாகா, ரயில்வே நிலையத்திலுள்ள டிக்கட் கொடுக்கும் காரியாலயத்தைப்போல் தோற்றமளிக்கிறது. நீலவர்ண பல்புகளால் பிரகாசமாக விளங்கும் இப்பகுதியைக் குறித்து ஸ்காட்லாந்து யார்ட் விசேஷ பெருமை கொள்ளவும் முடியும். ஏனெனில் அவ்விலாகாவின் ஒரு கமிஷனரான ஸர் எட்வர்ட் ஹென்றி என்பவர் தான் விரல் ரேகைகளின் மூலம் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறையையும், அதற்கான சாதனங்களையும் முதன் முதல் கண்டுபிடித்தார். அவர் கையாண்ட முறைகள் தற்போது உலகமனைத்திலுமுள்ள சகல போலீஸ் படையினராலும் கையாளப்பட்டு வருகின்றன.

---


மாகாண மாணவர்

## இந்தி எதிர்ப்பு மாநாடு

சென்னை மெமோரியல் மண்டபத்தில்! ★ 1—8—48 ஞாயிறன்று!

தலைவர்: பேராசிரியர் இலக்குவனர் B.O.L., M.O.L.

திறப்பாளர்: கொ. மொ. ஜனார்த்தனம் B.A., B.Com

வரவேற்புத் தலைவர்: கே. ஏ. மதியழகன்

திராவிட மாணவ மணிகளே, திரண்டு வாருங்கள்!

போர்வாள்

31—7—48 சனிக்கிழமை

# ஏதோ ஒன்று இருக்கிறது!

"ஆருவது வகுப்பில் படிக்கும் ஆறுமுகம் அருமையான பிள்ளை! அற்புதமான அறிவுத் திறமை படைத்தவன்! வெகு புத்திசாலி, வெகு புத்திசாலி! கணக்கில் 100க்கு 100! சரித்திரத்தில் 87! பூகோளத்தில் 92! விஞ்ஞானத்தில் 89! ஆங்கிலத்தில் 86! தமிழில் 88! ஒவ்வொரு பாடத்திலும் அவன்தான் முதல் மாணவன் அந்த வகுப்பிலேயே! எந்தப் பாடத்தை எடுத்துக்கொண்டு எந்தக் கேள்வியைக் கேட்டாலும் 'டக் டக்' என்று பதில் சொல்கிறன். மணி, மணி, படிப்பில்! இப்படி ஒரு பையன் இருப்பது நம்ம பள்ளிக்கூடத்துக்கே ஒரு பெருமை! **என்றாலும் அவனை மேல் வகுப்புக்கு மாற்றுவதற்கில்லை!"**

—ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர் **ஆராவமுத அய்யங்கார்** ஆருவது வகுப்பு ஆறுமுகத்தைப் பற்றிக் கூறும் தகவல் இது!

* * *

"பெண், நல்ல அழகு! குணமோ தங்கம். சொத்து ஏராளம்! படிப்பில் பி.ஏ! நம்ம பையனுக்கு காலேஜில் "க்ளாஸ் மேட்" கூட! அந்தக் குடும்பத்தைப் பற்றியும் யாரும், தப்பா, ஒரு வார்த்தை சொல்லமுடியாது. ரொம்ப பிரக்யாதி பெற்ற குடும்பம்! பெண்ணுக்கு அப்பா எனக்கு நீண்ட நாள் நண்பர்! அந்தப் பெண்ணைப் பற்றி நம்ம பையனுக்கும் சம்மதந்தான். அதுக்குக்கூட நம்ம பையன்மேல் "ஆசை" ன்னுதான் கேள்வி. பெண்ணுக்கும் பையனுக்கும் எல்லாவிதத்திலும் பொருத்தந்தான். அவங்க வீட்டாரு எங்க வீட்டாரு எல்லோருக்குமே இந்த சம்பந்தம் பண்ணிடணும்னுதான் ஆசை, **என்றாலும் என் பிள்ளையை அந்தப் பெண்ணுக்குத் தருவதற்கில்லை!"**

—**திவான்பகதூர் திம்மப்ப செட்டியார்**, தன் அருமை நண்பர் நாராயணசாமி நாயுடுகாரிடம் தன் "பையன் கல்யாணத்தைப்" பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் சிதறி வீழ்ந்த முத்துக்கள் இவை!

* * *

"இங்கே வேலை காலியாய் இருக்கிறது என்பது உண்மை. இந்த வேலைக்கு ஒரு ஆளைப் போடுவதற்கு முழு உரிமையும் என்னிடம் இருக்கிறது என்பதும் உண்மை. இந்த வேலைக்கு அந்த முருகப்பனைக் காட்டிலும் தகுதியானவன் வேறு எவனும் கிடைக்கமாட்டான் என்பதும் உண்மை. அந்த முருகனுக்கே இந்த வேலையைத் தரவேண்டும் என்று நான் "உள்ளூர" விரும்புவதாகக் கூறினீர்களே, அதுவும் உண்மை! **என்றாலும் அவனுக்கு நான் இந்த வேலையைக் கொடுக்கப் போவதில்லை!"**

—காலியாய் இருக்கும் வேலையை முருகப்பனுக்குக் கொடுத்தால் என்ன என்று கேட்ட தன் துணை அலுவலரைப் பார்த்து, மேனேஜர் முத்துரங்கம் எடுத்து மொழிந்த அவருடைய "முடிந்த முடிபு" இது!

* * *

"இந்த 'ஷர்ட்' பலே ஜோரா இருக்குதுப்பா! இந்த பாப்ளெயின் துணிதான் எனக்கு ரொம்ப பிடிக்கும்பா! இந்த மாதிரி துணியில் தைத்த இந்த மாதிரி ஷர்ட்தான் வேணும் வேணும் என்று நான் எத்தனையோ நாளா சொல்லிக்கொண்டிருக்கிறேம்பா! இந்த ஷர்ட்டைப் பார்க்கப் பார்க்க எனக்கு ஆசையா இருக்குப்பா! **இருந்தாலும் இதை நான் போட்டுக்கப் போறதே கிடையாதுப்பா!"**

—தன் மகனுக்குப் புதிய சட்டை தைத்துக்கொண்டு வந்த தகப்பனுரைப் பார்த்து சிறுவன் செல்வரங்கம் இதுபோலக் கூறினன்!

* * *

ஹிந்துஸ்தான் முதலமைச்சர் பண்டித ஜவகர்லால் நேரு சென்ற கிழமை சென்னையில், நகரசபையின் வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசியதைக் கேட்டதும் இந்த நிகழ்ச்சிகள் நம் நினைவிற்கு வந்தன, புன்னகை நம் முகத்திலே வந்தது, புன்னகை பெருஞ் சிரிப்பாயிற்று, கடகடவெனச் சிரித்துவிட்டோம் நாம்.

அலகாபாத் பண்டிதரின் அழகான ஆங்கிலப் பேருரையை ஒரு முறை படித்தோம், ஆறுமுகத்தின் அற்புதமான கல்வித் திறமையைப்பற்றி அடுக்கடுக்காக எடுத்துக் கூறிவிட்டு, ஆனாலும் அவனை மேல் வகுப்புக்கு மாற்றுவதற்கில்லை என்று ஆராவமுத அய்யங்கார் கூறிடும் அதிசயமான காட்சி நம் மனக் கண்முன் வந்து நின்றது.

மனித குல மாணிக்கம் என்று மறைந்த உத்தமர் காந்தியாரால் போற்றிப் புகழப்பட்ட புனிதரின் உரையை மறுமுறை படித்தோம், பெண்ணின் அழகை, குணத்தை, கல்வித் திறத்தை, குடும்பப் பெருமையை, திருமணப் பொருத்தத்தை, பெண் பிள்ளையை விரும்புவதை, பிள்ளை பெண்ணை நேசிப்பதை, இருவரையும் இரு வீட்டாரும் ஒன்று பிணைக்க விழைவதை, அத்தனையையும் நிரல் நிரலே எடுத்துச் சொல்லிவிட்டு, என்றாலும் என் மகனை அவர் மகளுக்குத் தருவதற்கில்லை என்று "புதுமொழி" பேசிய திவான்பகதூர் திம்மப்ப செட்டியார் நம் உள்ளத் திரையிலே வந்து தோன்றினர்.

சொத்து சுகத்தை மறந்து, போக போக்கியத்தைத் துறந்து, செல்வம் முதலிய மாயைகளை உதறி எறிந்து, ஏழை எளியார்போல் உடை தரித்து, வறியார்போல் வாழ்ந்து, வாழ வழியற்றார்போல் நாடெங்கும் அலைந்து திரிந்து, அன்னை பாரததேவிக்கு இடப்பட்டிருந்த விலங்குகளை உடைத்தெறிந்த தீரர் வருகிறார், மாவீரர் வருகிறார், சுதந்தர ஜோதியை ஏற்றி வைத்த சுந்தர புருஷர் வருகிறார், சுகுமாரர் வருகிறார், அண்ணல் மகாத்மாவின் ஆத்மீக வாரிசு போன்றவர் வருகிறார், தியாகத்தின் சின்னம் எனத்தகும் தலைவர் வருகிறார், அஞ்சாத நெஞ்சு படைத்த ஆணழகர் வருகிறார், வருகிறார்—வருகிறார்—பராக்

பராக்—என்று தேசிய ஏடுகளால் சென்ற இரண்டு மூன்று வாரங்களாகவே "இன்னிசை கீதம்" இசைக்கப்பட்டுவந்த பண்டித நேருவின் சொற்பொழிவை மீண்டும் ஒருமுறை படித்தோம், வேலை காலிதான்—ஆள் நியமிக்கும் உரிமையும் எனக்குத்தான்—அந்த வேலைக்கு ஏற்றவனும் முருகப்பன்தான்—அவனுக்கு அந்த வேலையைக் கொடுக்க வேண்டியது மிக மிக அவசியம்தான்—அவசியம் மட்டுமல்ல, முறையும் கூட அதுவேதான்—என்னுடைய விருப்பமும் அவனுக்கு அந்த வேலையைத் தருவதுதான்—என்னைத் தடுப்பாரோ யாரும் இல்லைதான்—என்றாலும் அந்த வேலையை நான் அவனுக்குத் தரப்போவதில்லை காண் என்றாரே மேனேஜர் முத்துரங்கம், அவர் வந்து நின்றார் நேருவின் சொற்பொழிவைப் படித்துவந்த நம் கண்முன்னால்!

வீரர் ஜவஹரின் தீர உரையை மறுபடியும் ஓர் முறை படித்தோம், கொஞ்சம் கவனமாகவே படித்தோம், எழுத்தெண்ணிப் படிப்பது என்கிறார்களே புலவர் பெருமக்கள் அந்த முறையிலேயே ஆழ நினைந்து படித்தோம். இம்முறை, படித்ததும், "எனக்கு உகந்த சட்டை இது—ஆனாலும் வேண்டாம் இது" என்று விபரீத மொழி பேசிய செல்வரங்கம் நம் விழி முன்னே வந்து தோன்றினான்!

ஆம்! பண்டித நேருவின் சொற்பொழிவு நமக்கு ஆராவமுத அய்யங்காரையும் திவான்பகதூர் திம்மப்பனாரையும் மேனேஜர் முத்துரங்கத்தையும் சிறுவன் செல்வரங்கத்தையும் தான் நினைப்பூட்டுகிறது. அது இயற்கையும்தான்! ஏனெனில் நேருவின் சொற்பொழிவு போகிற பாதை அவர்கள் அனைவரின் உரையாடல்களும் போய் வந்த அதே பாதைதான்! போகிற பாதை மட்டுமல்ல நடந்து செல்கிற "பாணி" கூட அதுவேதான்!

"வட இந்தியாவில் வாழும் மக்களுக்கும் தென்னிந்தியர்களாகிய உங்களுக்குமிடையே ஏராளமான வேறுபாடுகள் இருக்கின்றன. தட்ப வெப்ப நிலையிலும் வாழ்க்கை முறையிலும்கூட நீங்கள் வடஇந்தியரிடமிருந்து வேறுபட்டிருக்கிறீர்கள். எந்த விதத்தில் பார்த்தாலும் தென்இந்தியா தனிப்பட்டதோர் பழம் பெரும் கலாச்சாரம் படைத்த பிரதேசம் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். என்றாலும் நீங்கள் பிரிவினை உணர்ச்சிக்கு உள்ளாகி விடாமல், எந்தப் பிரச்சினையையும் தென் இந்தியக் கண்ணோட்டத்தில் மட்டும் பார்ப்பது என்கிற குறுகிய மனப்போக்குக்கு ஆட்பட்டுவிடாமல், நாம் அனைவரும் இந்தியர் என்ற உயர்ந்த நிலைக்கு வரவேண்டும."

—பண்டித நேருவின் சொற்பொழிவின் சாரம் இது. இப்போது நீங்களே கூறுங்கள் பண்டித நேருவின் உருவிலே ஆராவமுதமும், செல்வரங்கமும், மேனேஜர் முத்துரங்கமும் திவான்பகதூர் திம்மப்ப செட்டியாரும் நின்று நர்த்தனமாடுகின்றனரா இல்லையா என்பதை!

"தென் இந்தியர் தனித்த கலாச்சாரம் படைத்தவர்கள், தனியான வாழ்க்கை முறை உடையவர்கள், தனித்ததோர் பண்பாட்டில் பிறந்து வளர்ந்தவர்கள், வட இந்தியரிடமிருந்து பல வழிகளிலும் வேறுபட்டவர்கள், அவர்களுடைய மொழிகளும் இந்தியரின் மொழிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டவையே, வடநாட்டு ஹிந்தி தென்னாட்டில் புகுவதே கஷ்டம், ஏனெனில் இங்குள்ள மொழிகள் தனிப்பட்ட பண்பும் வளர்ச்சியும் படைத்தவை, என்று தொடங்கும் வாசகம், "ஆகவே தென்னாடு தனி அரசு அமைத்து தனி வாழ்வு செலுத்துவதே முறை" என்று தானே முடிய வேண்டும்? அதுதானே முறை! ஆனால் நேருவோ அப்படி முடிக்கவில்லை. ஆனாலும் ஒன்றாயிருக்க வேண்டும் என்று முடிக்கிறார், "ஆறுமுகம் கிடைத்தற்கரிய கெட்டிக்காரன்தான் ஆனாலும் கீழ்வகுப்பிலேயே இருக்கவேண்டும் அவன்" என்று "நல்ல தீர்ப்பு" நல்கினாரே ஆராவமுத அய்யங்கார், அதுபோல! அழகிலும் குணத்திலும் படிப்பிலும் திறத்திலும் செல்வத்திலும் செல்வாக்கிலும் வயதிலும் உருவிலும் பெண்ணும் பிள்ளையும் மிக மிகப் பொருத்தமானவர்கள், என்றாலும் பெண்ணுக்குப் பிள்ளையைத் தரமுடியாது என்றாரே திவான்பகதூர் திம்மப்பனார், அதுபோல! சட்டையோ அழகானது, அதன் நிறமோ எனக்குப் பிடித்தமானது, அதை நான் விரும்புவதோ இயற்கையானது, எனக்கு அதனிடம் ஆசை இருப்பதும் உண்மையானது, ஆனாலும் அது தேவையில்லை எனக்கு என்றானே சிறுவன் செல்வரங்கம், அதுபோல!

ஆராவமுதங்களும் திம்மப்ப செட்டியார்களும் செல்வரங்கங்களும் முத்துரங்கங்களும் அப்படிப் பேசுவதை நாம் புரிந்துகொள்ள முடியும், பொறுத்துக் கொள்ளவும் முடியும், ஏனெனில் அவர்கள் குறைமதி படைத்தவர்களாகவோ, கோணல் புத்தி உடையவர்களாகவோ, "சில்லறைக்" காரணங்களுக்காக நீதியை நேர்மையை நெகிழவிடுபவர்களாகவோ, உண்மையை மறைக்கும் உலுத்தர்களாகவோ கூட இருக்கக்கூடும், ஆகவே அத்தகைய "முரண் தொடை"களை வீசி இருக்கக்கூடும், ஆனால் இந்தியாவின் பிரதமர் அத்தகைய வாசகங்களை வீசுகிறார் என்றால் அதைத்தான் நாம் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில் அவரோ நீதிநெறி பிறழாதவர்! நியாயத்தினின்று வழுவாதவர்!!

தனித்த கலாச்சாரமும் நெறியும் முறையும் வழியும் மொழியும் படைத்தது தென்னாடு என்றால் அது தனி நாடாக இருப்பதுதானே முறை! ஏன் அதை நேரு மறுக்கிறார்? ஏன் தென்னாடு தனிநாடு என்று திராவிடப் பெருங்குடி மக்கள் இட்டு வரும் இடிமுழக்கத்தை குறுகிய மாகாணப் பற்று என்று இழித்தும் பழித்தும் உரைவிரிக்கிறார்? ஏன்? என்ன காரணம்?

வடநாடாவது தென்னாடாவது, திராவிட கலாச்சாரம் என்றொன்று இருப்பதாவது, தென்னாட்டவர் தனித்தபண்பும் நலமும் மொழியும் வழியும் கொண்டு வாழ்வதாவது, எல்லாம் பொய், எல்லாம் புரட்டு என்று பேசும் நாமக்கல்லார்கள் தென் இந்தியா தனி அரசு அமைப்பதை எதிர்க்கலாம்—அது அவர்களுடைய அறியாமைக்கு எடுத்துக் காட்டு—ஆனால் திராவிடக் கலாச்சாரம் தனிப்பட்டது என்பதை நன்குணர்ந்த நேரு, உணர்ந்தது மட்டுமல்ல மகத்தானதோர் பொதுக்கூட்டத்தில் ஒளிக்காமல் மறைக்காமல் அதனை வெளிப்படையாக உரைக்கும் நேர்மைத்திறம் படைத்த நேரு, தனித்த கலாச்சாரம் படைத்தவர் தென்னாட்டவர் என்பதை மட்டுமல்ல அவர்களுடைய தனித்தன்மை வாய்ந்த கலாச்சாரம் மிகப் பழையது சிறந்தது பண்பட்டது என்பதையும் எடுத்துக் கூறியுள்ள நேரு, எடுத்துக் கூறிய அதே மூச்சிலே, அதே விநாடியிலே எந்த திராவிட கலாச்சார மேன்மையைப் பாராட்டி அவர் பேசி இருக்கிறாரோ, அதே திரா

விடக் கலாச்சார அடிப்படையிலே சுதந்தர திராவிடம் வேண்டும் என்று கூறிடும் திராவிடப் பெருங்குடி மக்களை குறுகிய மாகாணப் பித்துடையவர்கள் என்று பழி தூற்றுகிறாரே, தூற்றலாமா?

ஒரு நாடு 'தனி நாடு' என்ற மதிப்பையும் அதற்கேற்ற அரசியல் அமைப்பையும் பெறுவதே அந்த நாட்டு மக்கள் கலாச்சாரம், மொழி, வாழ்க்கை வழி, ஆகியவற்றில்பிறநாட்டாரிடமிருந்துமாறுபட்டவர்கள் என்ற காரணத்தால்தான். ஜெர்மானியர் தனி கலாசாரமும் மொழியும் பரம்பரைப் பண்பாடும் படைத்தவர்கள்—ஆகவே அவர்கள் தனி அரசு அமைத்தனர். இதாலியருடைய கலாசாரம் வேறு, பிரஞ்சு நாட்டவர் கலாச்சாரம் வேறு, ஆகவே இதாலி வேறு நாடு, பிரான்சு வேறு நாடு. ஆங்கிலேயர் தனித்த கலாசாரமும் மொழியும் படைத்தவர்கள், ஆகவே அவர்கள் தனி நாடு. இந்த முறையில் பார்க்கும்போது, திராவிடர்கள், ஆங்கிலேயர் இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் தம் ஆட்சி முத்திரையைப் பொறித்தவரை தனி அரசு அமைத்து வாழ்ந்த பரம்பரையில் வந்தவர்கள், அசோகர் காலத்தில் தனி அரசாயிருந்தவர்கள், அக்பர் காலத்திலும் தனி அரசாயிருந்தவர்கள், வேத காலத்திலும் சரி, புத்தர் காலத்திலும் சரி, ஹர்ஷர் காலத்திலும் சரி, கனிஷ்கர் காலத்திலும் சரி, அவுரங்கசீப் காலத்திலும் சரி, தனி நாடு கண்டு தனி அரசு செலுத்தி வந்தவர்கள், சேரன் செங்குட்டுவர்களைக் கொண்டு கனக விசயர்களை வென்றடக்கிய வீர வரலாறு படைத்தவர்கள், இமயத்தில் தன் புலிக்கொடி நாட்டிய திருமா வளவனைத் தம் முன்னோன் என உரைக்கும் பேறு பெற்றவர்கள், கடாரம் வென்றவர்களையும் ஈழத்தை அடிப்படுத்தியவர்களையும் 'கங்கை கொண்டான்' களையும் "ஆரியப் படை கடந்தான்" களையும் தம்மையாண்ட மன்னவர்களாகக் கொண்டிருந்தவர்கள், வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டவர்கள், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழும், தமிழில் மலர்ந்த தெலுங்கு மலையாளம் கன்னடமும் தம் மொழிகள் எனக் கொண்டவர்கள், 5000 ஆண்டுகளுக்கு முன்னரேயே 'மகஞ்சதரோ' அமைத்தவர்கள், வேதங்கள் தோன்றுதற்கு முன்னரேயே தொல்காப்பியம் போன்ற ஒல்காப் புகழ் செறிந்த இலக்கியங்களைத் தீட்டியவர்கள், திராவிடர்கள், ஏன் அவர்கள் தனிநாடு கேட்கமாட்டார்கள்? அவர்கள் என்ன இல்லாததையா கேட்கிறார்கள்? இருக்க முடியாததையா கேட்கிறார்கள்? இல்லையே! அவர்களுடைய நாடு, திராவிடம்; முழுமதியென இருக்கிறது, ஆனால் வடநாட்டு ஆட்சி எனும் முகில் அதனை மூடிக் கிடக்கிறது; அந்த முகிலைக் கிழித்தெறிவோம், வெளிப்படட்டும் எம் முழுமதி என முழக்கமிடுகின்றனர். தவறா? எங்கள் "**மகஞ்சதரோ**" மீது வடநாட்டு மண் மூடிக் கிடக்கிறது, அந்த மண்ணை வெட்டி எறிவோம், **மகஞ்சதரோவை** வெளிக் கொணர்வோம், ஈரோட்டுத் திட்டப்படி அதை நாங்கள் புதுப்பித்திடுவோம், இனியும் எங்கள் இன்பபுரி மீது மண் மூடிக் கிடக்க யாம் ஒப்பமாட்டோம் என்று அழுத்தந் திருத்தமாக அறிவிக்கின்றனர், அந்த மகஞ்சதரோ இருப்பதை தமக்கு அறிவித்த தம் தலைவர் **பெரியார்** தலைமையில் கூடிநின்று! குற்றமா? இது குற்றம் எனில் இந்தக் குற்றம் புரிவதினும் இன்பம் திராவிடர்க்கு வேறு இருக்கமுடியுமா?

பண்டித ஜவகர்லால் நேரு—தென்னாட்டிற்கு விருந்தினராக வந்தவர், வந்த இடத்திலே ஏன் இவ்வாறு விருந்திட்டவர் உள்ளம் வருந்தத்தக்க உரைகளை வீசிவிட்டுச் செல்லவேண்டும்? அவரனைய பெருமக்கட்கு ஏற்ற பண்பல்லவே இது! அவர் கூறி இருக்கக் கூடாதே இத்தகு வார்த்தைகளை! தென்னாடு தனி கலாச்சாரம் படைத்தது என்று அவரே கூறுகிறாரே! அப்படியானால் அது தனி நாடாக இருக்கவேண்டும் என்றுதானே அவர் அடுத்தாற்போல் கூறி இருக்க வேண்டும்? எக் காரணத்தாலோ அதனைக் கூற இயலவில்லை அவரால் என்றால் ஏதும் உரையாது சும்மா இருப்பதல்லவா முறை? அதைவிட்டு, உண்மையை உரைப்பவரை, நீதிக்கு வழி அமைப்பவரை, தனி அரசு கேட்பவரை குறுகிய மாகாணப் பித்தினர் என்று கேலி பேசினாரே நேரு, பேசி இருக்கலாமா?

**தென் இந்தியா தனித்த, பழைய, கலாச்சாரம் படைத்தது. ஆனாலும் அது தனியாய் இருக்கக்கூடாது!**—இந்த முன்னுக்குப் பின் முரணான வாதத்தை எப்படிக் கூறினார் நேரு, மனந்துணிந்து?

முற்றிலும் வேறுபட்ட வட நாடும் தென்னாடும் ஒன்றாயிருக்கவேண்டும், ஏனெனின் அவற்றின் பல் வேறுபட்ட வேற்றுமையினூடே **ஏதோ ஒரு வகை** ஒற்றுமை இருக்கிறது என்கிறாரே நேரு, எங்கே இருக்கிறது அந்த ஏதோ ஒருவகை ஒற்றுமை? எதிலே இருக்கிறது ஒற்றுமை? கலையிலா? மொழியிலா? உடையிலா? உணவிலா? வாழ்க்கை முறையிலா? தட்ப வெப்ப நிலையிலா? மக்கள் மனப் பண்பிலா? வடநாட்டவர்க்கும் தென்னாட்டவர்க்கும் இடையே எதிலே இருக்கிறது ஒற்றுமை, இரு சாராருக்கும் வெள்ளையன் பொது எதிரியாக இருந்தான், அந்தப் பொது எதிரியை ஒழிக்க அவன் இருக்கும்வரை இரு சாராரும் ஒன்று கூடி நின்றனர் என்பதில் தவிர?

**ஏதோ ஒன்று இருக்கிறது வடநாட்டையும் தென்னாட்டையும் பிணைக்க!**—என்ன அந்த **ஒன்று?** எங்கே இருக்கிறது அந்த **ஒன்று?** நேரு விளக்குவாரா? நேருகூட வேண்டாம், நேரு வருகிறார், வரப்போகிறார், வந்துவிடுவார், வந்தேவிடுவார், வந்தேவிட்டார், இதோ போகிறார், அதோ செல்கிறார், அங்கே தேநீர் சாப்பிட்டார், இங்கே உடைந்த கண்ணாடித் தூள்களை அவரே பொறுக்கி எடுத்தார், அங்கே 'ஹிந்து' பத்திரிகை நிலையத்திற்குப் போனார், விவேகானந்தா கல்லூரிக்குப் போனார், எம். எஸ். எஸ். கச்சேரி கேட்டார் என்றெல்லாம் பற்பல நாட்களாகவே பறையடித்துவந்த தேசியத் தப்பட்டைகளாவது விளக்குமா? அல்லது தப்பட்டை அடிப்பதன்றி வேறொன்றும் அறியோம் பராபரமே என்று கூறிவிடுமா? தினசரியே, தேவியே, மித்திரனே, ஹிந்துவே, ஆரிய வட்டாரத்திற்குப் புதிதாகக் குடிபுகுந்துள்ள மெயிலே, தினமணியே, எக்ஸ்பிரசே, ஒன்றரை லட்சம் பேர் திரண்டு கூடிய தூத்துக்குடி மாநாட்டை இருட்டடிப்புச் செய்த வஞ்ச நெஞ்சங்களே, மலை விழுங்கி மாதேவர்களே, உங்களைத்தான் கேட்கிறோம், ஏதோ ஒன்று இருக்கிறது என்கிறாரே நேரு, என்ன அந்த **ஏதோ ஒன்று?** சொல்ல முடியுமா! சொல்வீர்களா? ......ஐயோ பாவம் ஏன் விழிக்கிறீர்கள் இப்படி...... சொல்லத் தெரியவில்லையா......சொல்ல முடியவில்லையா?......நீங்கள் என்ன செய்வீர்கள்?......இருந்தால்தானே சொல்ல?

———

# சாது மிரண்டால் காடு கொள்ளாது!

[இந்தி வந்தால் தமிழகம் அதனை ஏற்காது என்பதை மட்டுமல்ல, அறப்போர் தொடுத்தேனும் அதனை அழித்தே தீரும் என்பதை பத்து ஆண்டுகளுக்கு முன்பு காஞ்சிபுரம் இந்தி எதிர்ப்பாளர் மாநாட்டில், ஆந்திர நண்பர் சர். கே. வி. ரெட்டிநாயுடு ஆற்றிய இப்பேருரை அழகுபட விளக்குகிறது]

இப்பெரும் மாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் கௌரவத்தை எனக்கு அளித்தமைக்காக என் மனப்பூர்வமான வந்தனத்தை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்களுடைய அன்பான அழைப்பை ஏற்றுக்கொள்ள முதலில் நான் தயக்கமடைந்தேன். எனினும், இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவது, ஒரு மகத்தான பிரச்சினை மட்டுமல்லாமல், நமது பாஷை, கலை, நாகரீகம் ஆகியவைகளைப் பாதிப்பதாக இருப்பதை உணர்ந்த பிறகு, உங்கள் அழைப்பை ஏற்றுக்கொண்டேன்.

மேலும், என்னை இந்த மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கக் கேட்டுக்கொள்வதன் மூலம், இந்த பிரச்சினை, தமிழர்களை பாதிக்கக்கூடியதோடு, இந்த மாகாணத்திலுள்ள நான்கு பாஷா பிரதேசங்களையும் பாதிப்பது என்பதை அரசாள்வோர் அறியட்டும் என எண்ணுகிறீர்கள் என நம்புகிறேன்.

அது முற்றிலும் உண்மையேயாகும். இவ் விஷயத்தில் உங்களுடன் ஒத்த கருத்துடைய பல ஆந்திரர்கள் இருக்கிறார்களென உறுதி கூறுகிறேன்.

திராவிடரத்தம் ஓடும்ஒருவனாவது, இந்த வேண்டாத இந்தி பாஷை ஏற்கனவே சுமக்கமுடியாத பாரத்தைச்சுமந்துள்ள நமது சிறுவர்களிடமும், சாந்தத்தோடு இருக்கும் நம் வீட்டினுள்ளும் புகுத்தப்படுவதைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டான்.

முதலிலேயே ஒன்று கூறிவிடுவோம். பிள்ளைகளும் பெற்றோரும் விரும்பினால் இந்தியைப் படிக்கலாம். அதை நாம் கண்டிக்கப் போவதில்லை. கிரேக்க பாஷையானாலுஞ் சரி, அன்றி சீன பாஷையானாலுஞ் சரி, யார்வேண்டுமானாலும் தமக்குப் பிரியமான பாஷையைப் படிக்க உரிமை இருக்கிறது. கட்டாயப்படுத்தி இந்தியைத் திணிக்கும் செயலையே நாம் கண்டிக்கிறோம், எதிர்க்கிறோம்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், பிரஜா உரிமை பாதிக்கப்படுவதோடு, தமிழின் தனிப்பெருமை குன்றும், திராவிட நாகரீகம் சிதையும்.

மனிதனுடைய கருத்துக்களை, மொழி எவ்வளவு தூரம் உருவாக்குகிறது என்பதை இன்றைய (காங்கரஸ்) சர்க்கார் உணரவில்லை.

மக்களுடைய மொழியை ஒட்டியே மன வளர்ச்சி இருக்கிறது. குழந்தைகளின் கருத்துவளர்வதும், பிறகு வாழ்க்கையிலே இலட்சியங்கள் ஏற்படுவதும், பாஷை, கலை ஞானம் ஆகியவைகளினாலேயேயாகும்.

காங்கரஸ் தலைவர்கள் பழைய காலத்திய கலைகளிலே பற்றுக் கொண்டவர்கள். **அவர்களுடைய தேசீய வாழ்க்கைத் தத்துவங்களும், கருத்துக்களும் நம்மை துவாபர யுகத்திற்கோ, கிரேதா யுகத்திற்கோ அழைத்துப் போகக்கூடியன.**

அப்படிப்பட்ட இவர்கள் அன்னிய மொழியை நம்மிடையே புகுத்துவானேன்? திராவிடர்களாகிய நமக்கு, ஆங்கிலம் எப்படி அன்னிய மொழியோ, அப்படியே ஹிந்தியும் அன்னிய மொழிதான். அதிலும், ஹிந்தி மொழி பழய நாளைய மொழியுமல்ல, பூரண வளர்ச்சி அடைந்ததுமல்ல.

நான் ஹிந்தி மொழியைக் கற்றறிந்தேனில்லை, எனினும், எனக்குத் தெரிந்தவரை, 13-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலேதான், ஹிந்தி பாஷையின் ஆதிகவி எனப்படும் "சண்ட் பார்ட்டி" என்பவரிருந்தாரென அறிகிறேன்.

அவர், "பிரிதிவிராஜராஸ்யூ" என்ற நூலை எழுதினார். அந்த மொழியிலே அதற்கு முன்னால், வேறெந்த கலையும் இருந்ததாக நாமறியோம்.

ஆனால் தமிழ், இந்தியாவின் ஆதிகால மொழி. தமிழ் இலக்கணமாம் 'தொல்காப்பியம்' இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டது.

தமிழெங்கே? ஹிந்தி எங்கே? இரண்டிற்குமா ஒப்பிட்டுப் பார்ப்பது! தொல்காப்பியம் என்பது ஒரு இலக்கண நூல். ஒரு மொழி, நல்ல வளர்ச்சி அடைந்த பிறகுதான் அதற்கு இலக்கண நூல் தேவையாக இருக்கும்.

ஆகவே இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னாலேயே தமிழ் மொழி ஒரு உன்னத வளர்ச்சியைப் பெற்றிருந்தது என்பது விளங்கும். தமிழ்மொழி, பண்டைக்கால மொழி என்பதோடு, கவர்ச்சி, வனப்பு நிரம்பியமொழி, அதன் அடிகளை நெருங்கவும் ஹிந்தியினால் முடியவே முடியாது. "கவிதை இயற்றும் வகைக்கு ஏற்றபடி மொழியை வளர்த்ததில் சமஸ்கிரதத்தைவிட தமிழே சிறக்கிறது" என டாக்டர் பர்னல் கூறுகிறார்.

"திராவிட மொழிகளின் இலக்கணங்களை ஒப்பிட்டுப் பார்த்தல்" என்ற புத்தகத்தை எழுதிய ஆசிரியர் கால்ட்வெல், "தமிழில் கலைச் சொற்களை, ஒரு கவி திடீரென இயற்றி இருக்கமுடியாது; நீண்ட நாட்களாக, அவைகள் உற்பத்தி செய்யப்பட்டு, வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும், என்பதைக் கவனிக்கும் போது, தமிழ், மிகப்புராதன காலத்திலிருந்தே உன்னதமாக வளர்க்கப்பட்டு பலஆயிரம் ஆண்டுகட்கு முன்னேயே உச்சநிலை அடைந்தது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்" எனக் கூறுகிறார்.

இத்தகைய ஆதிமொழி என ஹிந்தியைக் கூறமுடியுமோ? குறள், தேவாரம், திருவாசகம், போன்ற ஒரு மணிக்கு ஒப்பான எந்த நூலேனும் ஹிந்தியில் காட்ட முடியுமா? ஹிந்தி, மிக நன்றாக வளர்ச்சி அடைந்த பாஷை என்று கூட வைத்துக் கொள்வோம். அதற்காக, அதை நமது மாகாணத்தில் கட்டாயப் படுத்திப் புகுத்த வேண்டுமா?

(11-ம் பக்கம் பார்க்க)

# உலகப் புகழ் பெற்ற "ஸ்காட்லந்து யார்ட்"!

[லண்டன் போலீசாரின் சிறை உலகப் புகழ் பெற்றது. அதிலும் அந்தப் போலீசின் துப்பறியும் இலாகாவின் அதி அற்புதத் திறமையை வியவாதார் யாரும் இருக்கமுடியாது. இங்கிலாந்தின் எந்த மூலையிலோ முடுக்கிலோ நடக்கும் எவ்வளவு மாயமான கொலையும் உடனே அந்தப் போலீசாரின் காதுக்கு எட்டிவிடும். உடனே அவர்களுடைய துப்பறியும் இலாகா மிக வேகமாகச் சுழலும். துப்பு துலங்கும். மாயம் மறையும், குற்றவாளி, கூண்டில் ஏற்றப்படுவான். அவர்கள், பல மாயக் கொலைகளின் மர்மத்தைக் கண்டறிந்த வரலாற்றைப் படித்தால், அது துப்பறியும் நாவல்களில் வரும் கதைகளை விடச் சுவை நிறைந்ததாயிருக்கும். இங்கு, எப்படி, அந்த லண்டன் போலீசாரால் இவ்வளவு திறமையாக வேலை செய்ய முடிகிறது என்பதற்கான காரணங்கள் சுருக்கமாகத் தாப்பட்டுள்ளன.]

சுமார் ஒரு நூற்றாண்டுக்குமுன் இங்கிலாந்து மன்னர்களின் வாசஸ்தலமாக இருந்துவந்த ஒயிட் ஹால் அரண்மனையின் ஒரு பகுதியே 'ஸ்காட்லாந்து யார்ட்' (Scotland yord) என அழைக்கப்பட்டுவந்தது. லண்டன் நகர போலீஸார் 1842ம் ஆண்டில் முதன் முதல் துப்பறியும் இலாகாவொன்றை இப் பகுதியில்தான் திறுவினார்கள். ஆகவேதான் லண்டன் நகர போலீஸாருடன் 'ஸ்காட்லாந்து யார்ட்' என்ற பெயரும் அன்றுமுதல் பொது மக்களின் மனதில் பதிந்துவிட்டது. அத்துடன் லண்டன் நகர போலீசின் தலைமைக் காரியாலயம் 1890ம் ஆண்டு வெஸ்ட்மினிஸ்டர் பாலத்திற்கருகிலுள்ள புது கட்டிடங்களுக்கு மாற்றப் பட்டபொழுது, அது 'ஸ்காட்லாந்து யார்ட்' என்ற பெயரையும் தன்னுடன் கூட அழைத்துச் சென்றது.

தற்போதுள்ள புது ஸ்காட்லாந்து யார்ட் காரியாலயம் மூன்று பிரம்மாண்டமான கட்டிடங்களில் அமைக்கப்பட்டுள்ளது. அவைகள் 1890, 1905, 1940, ஆண்டுகளில் கட்டப்பட்டவை. லண்டன் நகர போலீஸ் நடவடிக்கைகளின் கேந்திரஸ்தானமாக விளங்கும் இக்காரியாலயத்தின் அலுவல்கள் வரிசையாக அமைக்கப்பட்டுள்ள விசாலமான அறைகளில் நடைபெறுகின்றன. இவ்வறைகளுக்கு 24 மணி நேரமும் தகவல்கள் வந்துகொண்டிருப்பதுடன் லண்டன் நகரத்திலுள்ள 175 போலீஸ் ஸ்டேஷன்களுக்கு 'உத்தரவு'களும் இவைகளிலிருந்து அனுப்பப்படுகின்றன. 700 சதுர மைல் பரப்புள்ள கிரேட்டர் லண்டன் நகரப் பகுதிகளில் நடைபெறும் சகல சம்பவங்களும் ஒரு சில நிமிடங்களிலோ அல்லது சில வினாடிகளிலோ ஸ்காட்லாந்து யார்டிற்குத் தெரிந்துவிடும். ஸ்காட்லாந்து யார்டிற்குத் தெரியாமல் லண்டன் நகரப் பகுதிகளில் அசம்பாவிதம் நிகழ்வதென்பது சாத்தியமல்ல. தகவல்கள் வாங்கப்படும் அறைகளில் போலீஸ் அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட போலீஸ் ஸ்டேஷன்களுக்கு தகவல்களை அனுப்புவதற்குள்ள சிவிலியன் சிப்பந்திகளும் உள்ளனர்.

## 999

வரிசையாக அமைக்கப்பட்டுள்ள இவ்வறைகளில் மிகப்பெரியது 'தகவல் அறை' (Information Room). டெலிபோன் மூலமாகவும் டெலிபிரிண்டர் மூலமாகவும் அனுப்பப்படும் சகலவிதமான தகவல்களும் இந்த அறையில்தான் வாங்கப்படுகின்றன. 999 என்ற நெம்பரும் ஒயிட் ஹால் 1212 என்ற நெம்பரும் லண்டனில் மிகப் பிரபலமானவை. ஏனெனில் போலீஸின் உதவியை உடனடியாகக் கோரும் சாதாரண பிரஜைகள் 999 என்ற டெலிபோன் நெம்பரையே உபயோகிக்கின்றனர். இருட்டில்கூட எவ்வித கஷ்டமுமின்றி 999 என்ற நெம்பரை 'டயல்' செய்யமுடியும். அத்துடன் இது தகவல் அறையுடன் நேரடியாகத் தொடர்பையும் ஏற்படுத்துகிறது.

தகவல் அறைக்குள் நுழைந்தவுடன் அங்குள்ள மேஜைகளின் மீது பூகோள படங்கள் விரிக்கப்பட்டிருப்பதை ஒருவர் பார்க்கலாம். அவைகளுக்கருகில் 'டிராப்ட்ஸ்

(5-ம் பக்கம் பார்க்க)

**தமிழன் தொடுத்த போர்!**

மா. இளஞ்செழியன் B. A. (Hons) தீட்டியது!

1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் எழில் மிகு சித்திரம் இந் நூல். மறுபடியும் போர்முரசு கொட்டப்படும் இந் நாளில் தமிழர் ஒவ்வொருவரும் இதனைப் படித்துணரவேண்டியது மிக மிக அவசியம் என்பதை சொல்லத் தேவையில்லை.

240 பக்கங்கள் விலை 1 12 0 தபாலில் 2 0 0

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு :: சென்னை 1.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

10. 12-வயதுள்ள முதல் மூன்று பாரங்களில் வாசிக்கும் மாணவர்களுக்குஇந்திதிணிக்கப்படவேண்டுமென பிரயத்தனம் நடக்கிறது. ஏற்கனவே, இந்த மாணவர்களின் அறிவுத்திறனுக்கு மிஞ்சிய பாட வகைகள்உள்ளன. அதோடுஇந்தப் புதுமொழியைப்பரப்பஏராளமான பணச் செலவாகும், ஏராளமான உழைப்பும் தேவையாக இருக்கும். காலம், பணம் இவற்றை, கட்டாய ஹிந்தித் திட்டத்திற்கு விரயமாக்காது, மாணவர்களின் நன்மைக்கேற்ற வேறு எதற்கேனும் உபயோகித்தால் மிக இலாபகரமாக இருக்கும். இந்த வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் மீது மேலும் சுமையை ஏற்றுவது அடாது.

எந்தக் காரணத்திற்காக ஹிந்தி கற்பிக்கப்பட வேண்டும்? அதனல் என்ன பயன் விளேயும்? மூன்று ஆண்டுகளுக்குக் கட்டாயப் படுத்தப் படுவதால், ஹிந்தியை மாணவர்கள் படிப்பதால், அவர்களுக்கு அந்த மொழி அறிவு அப்படியே இருக்குமென்று எதிர் பார்க்கப் படுகிறது?

சிறு பிராயத்தில் இந்தியைப் படிப்பதால் இவர்கள் பெரியவர்களாகி, வேலே தேடிக்கொண்டு வடநாட்டிற்குச் செல்லும்போது, ஹிந்தி பாஷாஞானம் உதவியாக இருக்குமெனச் கூறுவது வெறும் கோமாளிக் கூத்தாகும்.

தலே முறை தலே முறையாக நமது மக்கள், யாத்திரை, வியாபாரம் முதலியவற்றின் பொருட்டு வடநாடு சென்று வருகிறார்கள். அவர்கட்கெல்லாம் ஹிந்தியைக் கட்டாய பாடமாகக் கற்கவேண்டுமென்ற அவசியம் ஒன்றும் ஏற்படவேயில்லே.

ஏதோ கொஞ்சம் பேசத்தெரிந்தால் போதும் வடநாடு சென்று, திரும்ப.

அதை வடநாட்டுக்கு வாணிபம் செய்யச் செல்பவர்கள் போகும் போது கற்றுக்கொள்ளட்டுமே! ஹிந்தியைப் படித்துவிட்டால் நமது வாலிபர்களுக்கு வடநாட்டிலே வேலே கிடைக்குமெனக் கூறப்படுவது மற்ருெரு கேலிக் கூத்து.

வடநாட்டிலே படித்தவர்களிடை வேலேயில்லாத் திண்டாட்டமில்லேயா? முதல் மூன்று பாரங்களில் ஹிந்தியைக் கற்றுக்கொண்டதற்காக 'மதராசிகளே' கலபத்திலே, வடநாட்டு மாகாணங்கள் வேலேக்கு அமர்த்திக்கொள்ளவா போகின்றன? இவைகள் சுத்த அபத்தம், ஆகவே இவைகளேப் பொருட்படுத்துவதற்கேயில்லே.

இந்தியை வைத்தே தீருவோம் என காங்கரஸ் மந்திரிகள் பிடிவாதமாக இருப்பதன் காரணந்தான் என்ன? இம்மாகாணத்துப் பார்ப்பனர், தங்கள் மூதாதைகளின் சரிதை, அவர்கள்பாஷையாம்சமஸ்கிருதம், இவைகளிடம் உள்ளபற்றை, மறந்து விடவில்லே எனக் கூறப்படுகிறது.

கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக இந்தியைப் படித்து விட்டு இருப்பவர்களுக்கு, காங்கரஸ்காரர், வேலே தேடிக்கொடுக்கவே இப்பிரயத்தனம் செய்கிருர்கள் எனவும் கூறப்படுகிறது.

இவர்களே ஆசிரியர்களாக ஏற்படுத்திவிட்டால், அவர்களும் வயிறு வளர்க்கமுடியும், காங்கரஸ் பிரசாரத்திற்கும் அவர்களேப் பயன் படுத்திக்கொள்ளலாம். ஆக இவ்விரண்டு காரியங்களுக்காகவுமே, திட்டம் போடப்பட்டிருக்கிறது எனவும் சொல்லப்படுகிறது.

இதைப்போன்ற ஏதாவதொரு காரணத்தைத் தவிர இவ்வளவு அவசர அவசரமாக ஹிந்தித் திட்டத்தைக் கொண்டுவரப் பதைபதைத்து நிற்பதற்கு, வேறு என்ன காரணத்தைக்கூறுவது? ஒருவேளே இவைகளே சரியான காரணங்களாக இருக்கவும்கூடும்.

ஆனல் இவைகளேதான் காரணங்களாக இருக்கவேண்டுமெனக் கூறவும் தேவையில்லே. இந்திய ஒற்றுமைக்கு ஒரு பொது மொழி அத்தியாவசியம் என அவர்கள் மனப்பூர்வமாக எண்ணியுமிருக்கலாம். அதுதான் அவர்களுடைய எண்ணம் என்பதை வேண்டுமானலும் ஒப்புக்கொண்டேபார்ப்போம்.

உண்மையிலேயே, ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவதற்கு ஏதாவதொரு காரணத்தை கூறவேண்டுமானல், இந்தியமக்களிடை ஒரு ஐக்கியஉணர்ச்சி ஏற்பட, யாவரும் ஒரு தேசமக்கள் என்ற உணர்ச்சி வளர, ஒரு பொது மொழி தேவை என்பதைத்தான் கூறமுடியும்.

அந்த ஒரு காரணந்தான் ஏதோ, பார்வைக்காவது காரணம் போல் தோற்றக்கூடும். இவ்விதம் பார்த்தால், இது அரசியல் நோக்கத்துடன் வரும் திட்டமென ஏற்படுமே தவிர, கல்வித் துறையிலுள்ள கொள்கை, இலட்சியங்களுடன் சம்பந்தப்பட்டதல்ல என்பதும் விளங்கும்.

ஆனல் சமஷ்டி ஏற்படின், தேசபக்தி வளரவோ, தேசிய ஒற்றுமை பலப்படவோ, மக்கள் ஒன்று கூடவோ, ஒரு பொது மொழி அத்யாவசியந்தானு? சரித்திரம் மாறுபட்ட உண்மையையே சாற்றுகிறது.

கானடாவைப் பார்ப்போம். அங்கு சமஷ்டி அரசியல் இருக்கிறது. அங்கு இப்போதும், பிரான்சு இங்கிலீஷ் ஆகிய இரு மொழிகளும் பேசப்பட்டு வருகின்றன.

1791-ம ஆண்டு சட்டம்ஏற்பட்டதிலிருந்து, கனடா சட்ட சபையில் பிரன்ச்சு இங்கிலீஷ் ஆகிய இரு மொழிகளும், உபயோகிக்கப்படுகின்றன.

தென் ஆப்பிரிக்காவை எடுத்துக் கொள்வோம். அங்கு இரு ஜாதியினர் இருக்கின்றனர். இரு மொழிகள் இருக்கின்றன. ஆங்கிலேயருக்கு ஆங்கிலமும் போயர் எனப்படும் டச்சுக்காரருக்கு டச்சுமொழியும் இன்றும் இருந்துவருகின்றன.

1909-ம் வருஷத்திய தென் ஆப்பிரிக்கா சட்டத்தில், இங்கிலீஷ் டச்சு ஆகிய இரு மொழிகளேயும் சர்க்கார் உபயோகப்படுத்த வேண்டுமென்றும், இரண்டிற்கும் சம உரிமை, சம சந்தர்ப்பம், சம அந்தஸ்து, தரப்பட வேண்டுமெனவும், சட்டசபை நிகழ்ச்சிகள், குறிப்புகள் யாவும் இரு மொழிகளிலும் எழுதப்பட வேண்டுமெனவும், செக்ஷன் 137, கூறுகிறது.

மேலும், இரு மொழிகளில் ஏதேனும் ஒன்று தெரியவில்லே என்ற காரணத்திற்காக எந்த சர்க்கார் உத்தியோகஸ்தரையும் நீக்கக் கூடாது என, செக்ஷன் 145-ல் கண்டிருக்கிறது.

ஆகவே, தென் ஆப்பிரிக்காவிற்கு, ஒரு பொதுமொழி அவசியம் என்று கருதப்படவில்லே.

இரு சாராருக்கும் தத்தமது மொழியை விட்டுவிட மனமில்லே. இருவரும், ஒன்றுபட, ஒரு மொழி அவசியம் எனக் கருதவுமில்லே என்பது இதனல் நன்கு விளங்குகிறது.

ஸ்விட்ஜர்லாண்டு தேசத்திலே மூன்றுவித ஜாதியினர் உள்ளனர். மூன்றுவித பாஷைகள் பேசப்படுகின்றன. ஆனால் தேசம் ஒன்றுதான். தேசிய ஒற்றுமையும் உள்ளது.

**1874வது ஆண்டு நிறைவேறிய சமஷ்டி சட்டத்தின்படி ஜெர்மன், பிரான்ச்சு, இத்தாலியன், ஆகிய மூன்று மொழிகளும் தேசிய பாஷைகளாக ஏற்படுத்தப்பட்டன!**

அங்கு 100-க்கு 71 பேர் ஜெர்மன் மொழியும், 23 பேர் பிரன்ச்சு மொழியும், 5 அல்லது 6 பேர்தான் இத்தாலிய மொழியும், பேசுபவர்கள் என்றபோதிலுங்கூட, மூன்று மொழிகளும், தேசிய மொழிகளாக ஏற்படுத்தப்பட்டன.

இவைகளை எல்லாம் கவனிக்கும்போது, இந்தியாவிற்கு ஒரு பொது மொழி அவசியமில்லை என்பது நன்கு விளங்கும். பல நூற்றுக்கணக்கான மொழிகள் பரவி உள்ள, மாகாணங்களிலும், சுதேச சமஸ்தானங்களிலும், ஒரு புது பொது மொழியைப் பரப்பி நிர்ப்பந்தப் படுத்துவதென்பதும் சாத்தியமான காரியமாகாது.

**நிரந்தரமான ஒரு அகில இந்தியப் பொது மொழி கனவு உலகில்தான் இருக்கமுடியும்.**

காங்கரஸ் தேர்தல் அறிக்கையில் இதைப்பற்றி ஒருவார்த்தையுங் கூறப்படவில்லை. நான் படித்துப் பார்த்த அளவிலே, எந்தக் காங்கரஸ் வாதியும் தேர்தல் பிரசாரத்தின்போது, காங்கிரஸ் காரர் அதிகாரத்திற்கு வந்தால் இந்தியை நமது பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக்கப் போவதாகப் பேசவுமில்லை.

ஆகவே, அதிக பாதகத்தைத் தரும்படியான **இந்த இந்தித்திட்டத்தை காங்கிரஸ் மந்திரிகள் பொது ஜன ஆதரவான அதிகாரத்தைப் பெறாமலேயே நுழைக்கிறார்கள். ஆதரவிற்குப் பதிலாக பொதுஜன எதிர்ப்புத்தான் உருவாகி இருக்கிறது. நூற்றுக்கணக்கான கூட்டங்களிலே பொதுஜனப் பிரமுகர்கள், கட்டாய இந்தித் திட்டத்தை எதிர்த்தார்கள்.**

**மக்கள் இவ்வளவு எதிர்க்கும்போது ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தால், அது முழுத் தோல்வியில்தான் முடியும் என்பதுடன், ஆபத்தான நிலைமையையும் உண்டாக்கும் என்பதை, இந்த மந்திரிகள் உணரவில்லை.** திராவிடர்கள் பரம சாதுக்கள்தான், ஆனால் சாது மிரண்டால் காடு கொள்ளாது என்ற முதுமொழி, மந்திரிகளுக்குத் தெரியாததல்ல,

கலைஞான உரிமை நமது உயரிய இலட்சியம். அதை ஹிந்தி அரக்கன் தன் இருப்புக்காலின் கீழ் போட்டுத் துவைப்பதை நாம் சகியோம்.

நமது பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு ஏற்கனவே இருக்கும் சுமையோ அதிகம். இந்த ஹிந்தியைப் படிக்க, சக்தியையோ, நேரத்தையோ அவர்களால் செலவிட முடியாது. ஆங்கிலமிருக்கிறது. அதை வேறு கற்க வேண்டும்.

இப்போதே திராவிட மொழி வளர்ச்சியை ஆங்கிலம் கெடுத்திருக்கிறது. ஒரு பள்ளிக்கூட மாணவன்; கலாசாலை மாணவன், அல்லது ஒரு பெரியவர், யார் பேசுவதைக் கேட்டாலும், அவர்களுடைய உரையாடல்களிலே எவ்வளவு ஆங்கில வார்த்தைகள் புகுந்துவிடுகின்றன என்பதைப் பார்க்கலாம்.

பி. எ, பட்டதாரிகளுக்குங்கூட தமிழிலோ, தெலுங்கிலோ, ஒரு ஒழுங்கான பிரசங்கம் புரிய முடிவதில்லை. நமது எண்ணத்தின் போக்குகூட நமது மொழிகலைக்கு மாறானதாகவே இருக்கக் காண்கிறோம். இந்தக் கேடு போதாதென்று இந்த "அற்புதமான", ஹிந்தியும் மன வளர்ச்சிக்குப் பக்குவமான சிறு பிராயத்திலே நமது பிள்ளைகள் படித்தால், மேலும் இதைப் போன்ற கோளாறுகள் ஏற்படாது என்று யாரால்தான் உறுதி கூற முடியும்?

கட்டாய ஹிந்தித் திட்டத்தினால் மக்களிடை மனக்கொதிப்பு நாளுக்குநாள் வளர்ந்து வருகிறது. பார்க்கக் கண்களும் கேட்கச் செவிகளும் படைத்தவர்களாக நமது மந்திரிமார்கள் இருப்பின், அந்த எதிர்ப்பு எவ்வளவு பிரம்மாண்டமான உருவுடன் இருக்கிறதென்பதை அறிவர்.

அவர்கள் விவேகிகளாக இருந்தால், கர்சான் காலத்தில் வங்காளத்திலே பிரிவினை காரணமாக எவ்வளவு தொந்தரவு நேரிட்டதோ அவ்வளவு தொல்லைகள், ஹிந்தி காரணமாக இந்த மாகாணத்தில் ஏற்படும் என்று நாம் எச்சரிக்கை செய்வதை ஏற்றுநடப்பர்.

தன்னைப் பெற்ற தாய், தாய்நாடு, தாய் மொழி, ஆக ஒருவனுக்கு மூன்று தாய்மார் என்று நமது முதுமொழி ஒன்று கூறுகின்றது. தாயைக் கவனியாதவன் மாதா

(2-ம் பக்கம் பார்க்க)

## மாகாணத் தமிழாசிரியர் மூன்றாவது மாநாடு

★

**14—8—48-ல்**

**சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடைபெறும்**

கல்வித்துறை அறிஞர்கள்,
அரசியல் தலைவர்கள்
எல்லோரும் கலந்துகொள்வார்கள்.

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilanchelivan B. A. (Hon